சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – பகுதிநேர மற்றும் முழுநேர மருந்தகங்கள் – 2009–2010–ஆம் ஆண்டிற்கு மருந்தகங்களுக்கு பராமரிப்பு மானியம் ரூ.4,30,440/– வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–4) துறை

அரசாணை (பத்தாண்டுகள்) எண்.97 நாள்: 26.2.2010

படிக்கப்பட்டவை

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15, கடித எண்.31366/09/பரா அ 3–1, நாள் 22.12.2009.

–––

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், அரசாணை எண்.51, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 7.1.1977–ன்படி, ஆண்டு மான்யமாக, ஒரு பகுதிநேர ஊரக மருந்தகத்திற்கு ரூ.2,040/–ம், ஒரு முழுநேர மருந்தகத்திற்கு ரூ.5,400/–ம் மருந்தக பராமரிப்புக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். 2009–2010–ஆம் ஆண்டிற்கு பகுதிநேர/முழுநேர மருந்தகத்திற்கு பராமரிப்பு மான்யம் தேவை குறித்து கருத்துரு அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதன்படி, 2009–2010–ம் ஆண்டிற்கு, மருந்தகப் பராமரிப்பு மான்யமாக பகுதிநேர/முழுநேர மருந்தகங்களுக்கு கீழ்க்கண்டவாறு மானியம் தேவைப்படுகிறது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்:

| மருந்தக விபரம் | மருந்தகங்களின் எண்ணிக்கை | ஒரு மருந்தகத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| பகுதிநேர ஊரக மருந்தகம் | 31 | ரூ.2,040/– | ரூ.63,240/– |
| முழுநேர மருந்தகம் | 68 | ரூ.5,400/– | ரூ.3,67,200/– |
| மொத்தம் | | | ரூ.4,30,440/– |

2. 2009–2010–ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.6,94,000/– மருந்தகப் பராமரிப்பு மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

..2..



3. தற்போது 2009–2010–ம் ஆண்டிற்கு மருந்தக மற்றும் பராமரிப்பு மான்யமாக 31 பகுதிநேர ஊரக மருந்தகங்கள் மற்றும் 68 முழுநேர மருந்தகங்களுக்கான மொத்தப் பராமரிப்புத் தொகை ரூ.4,30,440/– மட்டும் அனுமதித்து ஆணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பி வைத்த செயற்குறிப்பினை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் ஏற்பதென அரசு முடிவு செய்து, 31 பகுதிநேர மற்றும் 68 முழுநேர ஊரக மருந்தகங்களுக்கு 2009–2010–ஆம் ஆண்டில் மானியமாக ரூ.4,30,440/– (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பதாயிரத்து நானூற்று நாற்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 03 – ஊரக சுகாதாரப் பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் I திட்டத்தில் சேராதது BS - உள்ளாட்சி மன்றங்களின் மருந்தகங்களுக்குப் பராமரிப்பு மானியம் – 09 – உதவித் தொகை – 01– நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”(து.தொ.கு 2210 03 110 BS 0910).

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானியத் தொகையைப் பெற்று வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.9536 / ஊரக வளர்ச்சி / 10, நாள் 25.2.2010ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சென்னை நீங்கலாக)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–15.
மாநில கணக்காயர், சென்னை–6/18/35.
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–15.

நகல்
நிதித்(ஊரக வளர்ச்சி) துறை, சென்னை–9.
உதிரி நகல்கள்/இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(கு.மகாலட்சுமி),
சார்புச் செயலாளர்.